தமிழகம் முழுவதும் ஆக.25 முதல்

# காலை உணவு திட்டம் விரிவாக்கம்

- **சுதந்திர தின உரையில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். இதன்மூலம் 15.75 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவர்.**



77-வது சுதந்திர தினத்தையொட்டி, சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்த முதல்வர் ஸ்டாலின். படம்: ம.பிரபு

**சென்னை**

காலை உணவு திட்டம் வரும் ஆக.25-ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்படுவதாக சுதந்திர தின உரையில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

நாட்டின் 77-வது சுதந்திர தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, 3-வது முறையாக, சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை முதல்வர் ஸ்டாலின் ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, சுதந்திர தின உரை நிகழ்த்தி முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிக்குளத்தில் இயங்கிவரும் அரசு வேளாண்மை கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்துக்கு அவரது பெயர் சூட்டப்படும். சுதந்திரப் போராட்ட தியாகிகளின் குடும்ப உறுப்பினர்களின் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10 ஆயிரத்தில் இருந்து ரூ.11 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

புதுமைப்பெண் திட்டத்தில், இந்த ஆண்டில் உயர்கல்வி பயிலும் 2.11 லட்சம் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்க ரூ.350 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**'விடியல் பயணம்' திட்டம்**

அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கும் திட்டத்தில் தினமும் 50 லட்சம் பெண்கள் பயணம் செய்கின்றனர். இத்திட்டத்துக்கு 'விடியல் பயணம்' என பெயர் சூட்டப்படுகிறது.

கடந்த ஆண்டு செப்.15-ம் தேதி 1 முதல் 5 ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல்வரின் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, வரும் கல்வி ஆண்டு முதல் 31,008 அரசுப் பள்ளிகளில் பயிலும் 15.75 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், வரும் ஆக.25-ம் தேதி முதல் மாநிலம் முழுவதும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது. மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி பயின்ற திருக்குவளை பள்ளியில் இத்திட்டத்தை தொடங்கி வைக்கிறேன். இதற்காக இந்த நிதி ஆண்டில் ரூ.404 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இளம் வயதை ராணுவப் பணியில் கழித்து, பணிக் காலம் நிறைவுபெற்று திரும்பும் முன்னாள் ராணுவத்தினர் பயன்பெறும் வகையில், ரூ.7 கோடியில், 10 ஆயிரம் பேருக்கு உரிய பயிற்சிகள் வழங்கி, திறனை மேம்படுத்தவும், அவர்கள் உரிய பணியில் அமரும் வரை தக்க உதவி செய்யவும் 'நான் முதல்வன்' திட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**தனியாக நல வாரியம்**

ஓலா, உபர், ஸ்விகி, ஸொமட்டோ போன்ற நிறுவனங்களை சார்ந்த பணியாளர்களின் நலனை பாதுகாக்க, தனியாக நல வாரியம் அமைக்கப்படும்.

பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ வாங்க ரூ.1 லட்சம் மானியம் வழங்கும் திட்டத்தில் 141 பேர் பயனடைந்துள்ள நிலையில், மேலும் 500 பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவரும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**55,000 பணியிடங்கள்**

பல்வேறு அரசுத் துறைகளில் காலியாக உள்ள 55 ஆயிரம் பணியிடங்கள் நடப்பு ஆண்டில் நிரப்பப்படும்.

சென்னை கதீட்ரல் சாலையில் செம்மொழிப் பூங்கா அருகே உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் ரூ.25 கோடியில் 'கலைஞர் நூற்றாண்டு பூங்கா' அமைக்கப்படும்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

சட்டப்பேரவை தலைவர் அப்பாவு, துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்கள், தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபூர்வாலா, நீதிபதிகள், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள், தூதரக அதிகாரிகள், துறை செயலர்கள், உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

மாயாபஜார்
உள்ளே...

### அப்துல் கலாம், கல்பனா சாவ்லா உள்ளிட்ட

# சிறப்பு விருதுகளை வழங்கினார் முதல்வர்

### கி.வீரமணிக்கு தகைசால் தமிழர் விருது



சென்னையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தமிழகத்துக்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிய திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணிக்கு 'தகைசால் தமிழர் விருது' மற்றும் ரூ.10 லட்சத்துக்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். உடன் தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா.

**சென்னை**

சென்னையில் நடந்த சுதந்திர தின விழாவில், பல்வேறு சாதனை படைத்தவர்களுக்கு விருதுகள், பதக்கங்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். திராவிடர் கழக தலைவர் கி.வீரமணிக்கு தகைசால் தமிழர் விருதை வழங்கி கவுரவித்தார்.

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நேற்று நடந்த சுதந்திர தின விழாவில் முதல்வர் ஸ்டாலின், தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார். பின்னர், பல்வேறு சாதனை படைத்தவர்களுக்கு விருதுகள், பதக்கங்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணிக்கு தகைசால் தமிழர் விருதுடன் ரூ.10 லட்சம் விருது தொகை, சான்றிதழ் ஆகியவற்றையும் முதல்வர் வழங்கினார். மனித குலத்துக்கு பயனளிக்கும் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட விஐடி பல்கலைக்கழக கணித பேராசிரியர் டபிள்யூ.பி.வசந்தா கந்தசாமிக்கு அப்துல் கலாம் விருதையும், உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த நா.முத்தமிழ்ச்செல்விக்கு வீரதீர செயலுக்கான கல்பனா சாவ்லா விருதையும் வழங்கினார்.

காலை உணவு திட்டம் தொடர்பான செயலியை உருவாக்கியதற்காக தமிழ்நாடு மின்ஆளுமை முகமைக்கான முதல்வரின் நல் ஆளுமை விருதை, அதன் தலைமை செயல் அதிகாரி ரமணசரஸ்வதி பெற்றுக் கொண்டார். ஆதரவற்ற நோயாளிகளுக்கு உயரிய சிகிச்சை மேற்கொண்டதற்காக சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வரும், ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை டீனுமான தேரணி ராஜனுக்கும், பாலியல் ரீதியான குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திய கோவை எஸ்.பி. பத்ரிநாராயணன் ஆகியோருக்கும் நல்ஆளுமை விருது வழங்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சேவையாற்றிய வகையில் மருத்துவர் த.ஜெயக்குமார், சிறந்த நிறுவனமான கன்னியாகுமரி சாந்தி நிலையம், சமூக பணியாளரான கோவை ரத்தன் வித்யாசேகர், அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனமான மதுரையின் டெடி எக்ஸ்போர்ட்ஸ், சிறந்த மத்திய கூட்டுறவு வங்கியான ராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கும் விருதுகளை முதல்வர் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து, கோட்டை கொத்தளத்தின் கீழே, தலைமைச் செயலக கட்டடம் முன்பு அமைக்கப்பட்டிருந்த மேடையில், மகளிர் நலனுக்காக சிறப்பாக பணியாற்றிய கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த 'கிராமத்தின் ஒளி' தொண்டு நிறுவனம், சிறந்த சமூக சேவகராக கோவை மாவட்டம் டி.ஸ்டான்லி பீட்டருக்கும் விருது வழங்கப்பட்டது.

சிறந்த உள்ளாட்சி அமைப்புகளை பொருத்தவரை, சென்னை மாநகராட்சியின் 9, 5-வது மண்டலங்கள், சிறந்த மாநகராட்சியாக திருச்சிக்கு முதல் பரிசு, தாம்பரத்துக்கு 2-ம் பரிசு, சிறந்த நகராட்சியாக ராமேசுவரம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடிக்கு முதல் 3 பரிசுகள், சிறந்த பேரூராட்சியாக விழுப்புரம் - விக்கிரவாண்டி, புதுக்கோட்டை - ஆலங்குடி, சேலம் - வீரக்கல்புதூருக்கு முதல்வர் விருதுகள் வழங்கப்பட்டன.

ஆண்கள் பிரிவில் நீலகிரி சி.தஸ்தகீர், திருச்சி ரா.தினேஷ் குமார், ராணிப்பேட்டை கோ.கோபி, செங்கல்பட்டு ப.ராஜசேகர் ஆகியோருக்கும், பெண்கள் பிரிவில் சென்னை மு.விஜயலட்சுமி, மதுரை செ.சந்திரலேகா, காஞ்சிபுரம் தா.கவிதா தாந்தோணி ஆகியோருக்கு முதல்வரின் மாநில இளைஞர் விருதுகள் வழங்கப்பட்டன.

போதைப் பொருள் தடுப்புக்கான முதல்வரின் காவல் பதக்கத்தை, சென்னை காவல் கூடுதல் ஆணையர் அஸ்ரா கார்க், கோவை எஸ்.பி. பத்ரிநாராயணன், தேனி எஸ்.பி. டோங்ரே பிரவின் உமேஷ், நாமக்கல் உதவி ஆய்வாளர் க.முருகன், நாமக்கல் முதல்நிலை காவலர் ஆர்.குமார் ஆகியோருக்கு முதல்வர் வழங்கினார். தொடர்ந்து, முதல்வருடன் அனைவரும் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.



↑ சுதந்திர தினத்தையொட்டி டெல்லி செங்கோட்டையில் தேசியக் கொடி ஏற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் மோடி.

### அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியா

# 3-வது பெரிய பொருளாதார நாடாகும்

## ● டெல்லி செங்கோட்டையில் 10-வது முறையாக கொடியேற்றிய பிரதமர் மோடி உறுதிபட தெரிவித்தார்.

● **புதுடெல்லி**

அடுத்த 5 ஆண்டுகளில் உலகின் 3-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும் என்று பிரதமர் மோடி உறுதிபட தெரிவித்தார்.

சுதந்திர தினத்தையொட்டி, பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து 10-வது முறையாக டெல்லி செங்கோட்டையில் நேற்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். ஒன்றரை மணி நேர உரையில் அவர் கூறியதாவது:

மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் பகத்சிங், சுகதேவ், ராஜகுரு போன்ற எண்ணற்ற மாவீரர்களின் தியாகத்தால் இந்தியா சுதந்திரம் அடைந்தது. சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் தலைவணங்கி மரியாதை செலுத்துகிறேன்.

**மணிப்பூர் வன்முறை**

கடந்த சில வாரங்களாக மணிப்பூரில் நீடித்த வன்முறையில் பலர் உயிரிழந்துள்ளனர். அந்த மாநில தாய்மார்கள், மகள்களின் கண்ணியத்துக்கு இழுக்கு ஏற்பட்டது. தற்போது மணிப்பூரில் அமைதி திரும்பி வருவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. மணிப்பூர் மக்களுக்கு ஆதரவாக ஒட்டுமொத்த நாடும் துணை நிற்கிறது. அங்கு அமைதியை நிலை நாட்ட வேண்டும். மணிப்பூர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண மாநில அரசும், மத்திய அரசும் தொடர்ந்து முயற்சி செய்யும்.

சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளோம். இப்போது அமிர்த காலத்தின் முதலாம் ஆண்டில் இருக்கிறோம். இன்றைய நமது முயற்சிகள், செயல்கள், தியாகங்கள் அடுத்த 1,000 ஆண்டு கால பொற்கால வரலாற்றுக்கு வழிவகுக்கும்.

கடந்த 2014-ல் உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் இந்தியா 10-வது இடத்தில் இருந்தது. இப்போது 5-வது இடத்துக்கு நாடு முன்னேறியுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் உலகின் 3-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும். வரும் 2047-ம் ஆண்டில் 100-வது சுதந்திர தினத்தை கொண்டாடும்போது வளர்ந்த நாடாக இந்தியா உருவெடுத்திருக்கும்.

தாய்மொழிக்கு முன்னுரிமை அளித்து வருகிறோம். இந்த நேரத்தில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் பிராந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. அதற்காக உச்ச நீதிமன்றத்துக்கு நன்றி.

**3 தீமைகளை எதிர்த்து போர்**

இந்தியாவின் கனவுகள் நனவாக வேண்டுமானால், ஊழல், வாரிசு அரசியல், ஒரு தரப்பினரை திருப்திப்படுத்தும் வாக்குவங்கி அரசியல் ஆகிய 3 தீமைகளுக்கு எதிராக போர் தொடுக்க வேண்டும். அப்போதுதான் நாடு முன்னேற்ற பாதையில் செல்ல முடியும். இதை கருத்தில் கொண்டு ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தி வருகிறது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் குற்றப் பத்திரிகைகள் எண்ணிக்கை முன்பைவிட அதிகரித்துள்ளது. ஜாமீன் பெறுவதுகூட கடினமாகிவிட்டது.

சொந்த, பந்தங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் நேபோடிசம், திறமைகளின் எதிரி. இதில் இருந்து நாடு விடுதலை பெற வேண்டும். அனைவருக்கும் சம வாய்ப்பு, சம உரிமை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். ஒரு தரப்பினரை திருப்திப்படுத்தும் வாக்குவங்கி அரசியல் சமூகநீதிக்கு எதிரானது. இதை தடுக்க வேண்டும். ஊழலை ஒருபோதும் சகித்துக்கொள்ள கூடாது.

இவ்வாறு பிரதமர் பேசினார்.



# புற்றீசல் நிபுணர்களும் போலி அறிவுரைகளும்

ஜி.ராமானுஜம்
மனநல மருத்துவர்

இந்த உலகில் காற்றுக்கு அடுத்தபடியாக அங்கிங்கெனாதபடி எல்லா இடங்களிலும் கிடைப்பது அறிவுரைதான். உண்மையில், அறிவுரை கூறுவது மனித இனத்தின் மிக முக்கியமான சமூக உளவியல் செயல்பாடாகும். பிற உயிரினங்கள் எல்லாம் அடுத்த தலைமுறைக்குப் பெரும்பாலும் மரபணுக்கள் மூலமாகவே இந்த மாற்றங்களைக் கடத்துகின்றன. மனித இனம் மட்டுமே மொழி மூலமாகப் பிற மனிதர்களுக்குத் தமது அனுபவங்களைக் கூறி அவர்களை மேம்படுத்துகிறது. எனவே, அறிவுரை கூறுவது காலம் காலமாகத் தொடர்ந்துகொண்டேதான் வந்திருக்கிறது. அறிவுரை தேவையான ஒன்றுதான். ஆனால், அறிவுரை சொல்பவர், அவர் சொல்வதன் மீதான நம்பிக்கை கேள்விக்குறி ஆவதுதான் இங்கு பிரச்சினையே.

# உண்மையான அடையாளத்தை மறைத்து பாலியல் உறவில் ஈடுபட்டால் 10 ஆண்டு சிறை

## மத்திய அமைச்சர் அமித் ஷா தாக்கல் செய்த 3 புதிய மசோதாக்களின் முக்கிய அம்சங்கள்

உண்மையான அடையாளத்தை மறைத்தோ, திருமணம், பணிவாய்ப்பு குறித்து போலி வாக்குறுதி அளித்தோ பாலியல் உறவில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படும் என்று புதிய மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அமல்படுத்தப்பட்ட இந்திய குற்றவியல் சட்டத்துக்கு (ஐபிசி) பதிலாக பாரதிய நியாய சன்ஹிதா 2023, இந்திய குற்றவியல் நடைமுறை சட்டத்துக்கு (சிஆர்பிசி) பதிலாக பாரதிய நாகரிக் சுரக் ஷா 2023, இந்திய சாட்சிகள் சட்டத்துக்கு (ஐஇசி) பதிலாக பாரதிய சாக் ஷியா விதேயக் 2023 ஆகிய 3 புதிய மசோதாக்களை மக்களவையில் மத்திய அமைச்சர் அமித் ஷா தாக்கல் செய்துள்ளார். இந்த மசோதாக்களின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

**பெண்களுக்கு எதிரான குற்றங்கள்**

- 12 வயதுக்கு உட்பட்ட சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்தால் குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அதிகபட்சமாக மரண தண்டனையும் விதிக்கப்படும்.
- உண்மையான (மத) அடையாளத்தை மறைத்தோ, திருமணம், பணிவாய்ப்பு, பதவி உயர்வு தொடர்பாக போலி வாக்குறுதி அளித்தோ பெண்களிடம் பாலியல் உறவில் ஈடுபடுவோருக்கு அதிகபட்சமாக 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டோர் சேர்ந்து பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்தால் குறைந்தபட்சம் 20 ஆண்டு சிறை, அதிகபட்சமாக சாகும்வரை ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.
- வரதட்சிணை கொடுமையால் பெண்கள் உயிரிழந்தால் குற்றவாளிக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டு சிறை, அதிகபட்சம் ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.

**தற்கொலைக்கு தூண்டினால்..**

- கொலை வழக்கு குற்றவாளிகளுக்கு ஆயுள் அல்லது மரண தண்டனை விதிக்கப்படும்.
- கும்பலாக சேர்ந்து கொலை செய்யும் குற்றத்துக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டு சிறை, அதிகபட்சம் மரண தண்டனை விதிக்கப்படும்.
- ஒருவர் தற்கொலை செய்து கொண்டால், அவரை தற்கொலை செய்ய தூண்டியவருக்கு அதிகபட்சம் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும்.
- ஆள்கடத்தலில் ஈடுபடுவோருக்கு 7 ஆண்டு முதல் 10 ஆண்டு வரை சிறை தண்டனை வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டோரை கடத்துவோருக்கு குறைந்தபட்சமாக 10 ஆண்டுகள் சிறை, அதிகபட்சமாக ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.

**தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை**

- இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுப்போருக்கு (தீவிரவாதிகளின் ஆயுத போராட்டம்) மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.
- அரசுக்கு எதிராக செயல்படும் நபர்களிடம் ஆயுதங்களை வழங்குவோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.
- இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுப்போருக்கு ஆள்சேர்ப்பது, அடைக்கலம் அளிப்பது உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுவோருக்கு அதிகபட்சமாக 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.
- இந்தியாவின் ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் வகையிலும் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாகவும் பேசுவது, எழுதுவது, நிதியுதவி வழங்குவது உள்ளிட்ட குற்றங்களுக்கு 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.
- தலைமறைவு குற்றவாளிகள் மீதான விசாரணை தொடர்ந்து நடத்தப்படும். அவர்களுக்கான தண்டனையும் அறிவிக்கப்படும்.
- மதம், சாதிரீதியாக வெறுப்புணர்வை தூண்டும் வகையில் பேசுவோருக்கு குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் சிறை, அதிகபட்சம் 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும்.
- குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்கலாம். ஆனால் எக்காரணம் கொண்டும் அந்த குற்றவாளி சிறையில் இருந்து விடுதலை செய்யப்படமாட்டார்.
- மரண தண்டனை கைதிகள் தங்களது தண்டனையை குறைக்கக்கோரி குறிப்பிட்ட காலத்துக்குள் கருணை மனுவை அனுப்ப வேண்டும். ஒருவேளை கருணைமனு நிராகரிக்கப்பட்டால் 60 நாளுக்குள் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்ப வேண்டும்.
- குற்றவாளிகளின் சொத்துகளை பறிமுதல் செய்ய நீதிமன்றத்தால் மட்டுமே உத்தரவுகளைப் பிறப்பிக்க முடியும். இந்த விவகாரத்தில் போலீஸ் அதிகாரிகள் உத்தரவுகளைப் பிறப்பிக்க முடியாது.

**பூஜ்ஜிய எப்ஐஆர்**

- இந்திய குடிமகன் ஒருவர் எந்தவொரு போலீஸ் நிலையத்திலும் புகார் அளிக்க முடியும். சம்பந்தப்பட்ட போலீஸ் நிலையத்துக்கு 15 நாட்களுக்குள் அந்த புகாரை போலீஸார் அனுப்ப வேண்டும். எப்ஐஆர் முதல் தீர்ப்பு வரை அனைத்தும் டிஜிட்டலில் பதிவு செய்யப்பட வேண்டும்.
- வழக்கில் ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிப்பது கட்டாயம். கைது செய்யப்பட்டதற்கான ஆவணத்தை சம்பந்தப்பட்ட உறவினரிடம் போலீஸார் வழங்க வேண்டும். 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கக்கூடிய வழக்குகளில் தடயவியல் ஆய்வு கட்டாயம்.
- வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபரின் கையெழுத்து, குரல் பதிவு, விரல் ரேகை பதிவை போலீஸார் பெறலாம். வழக்கில் தகவல் தொடர்பு சாதனங்களை ஆதாரங்களாகப் பயன்படுத்தலாம்.
- செல்போன் பறிப்பு உள்ளிட்ட சிறிய குற்றங்களும் கிரிமினல் வழக்காக கருதப்படும். ரூ.5,000-க்கு குறைவான திருட்டு வழக்குகளில் குற்றவாளிகளுக்கு சமூக சேவை சார்ந்த தண்டனைகளை வழங்கலாம்.
- ஒவ்வொரு போலீஸ் நிலையம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்களில் பழைய வழக்குகளில் கைது செய்யப்பட்டோரின் முழுவிவரங்கள் அடங்கிய டிஜிட்டல் தொகுப்பை உருவாக்க வேண்டும்.
- ஒரு வழக்கில் போலீஸார் 90 நாட்களில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய வேண்டும். நீதிமன்றம் விரும்பினால் கூடுதலாக 90 நாட்கள் அவகாசம் வழங்கலாம். இதன்படி 180 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்வது கட்டாயமாகும்.
- குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த 60 நாட்களுக்குள் நீதிமன்றம் குற்றச்சாட்டை பதிவு செய்ய வேண்டும். விசாரணை நிறைவு பெற்ற 30 நாளில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். 3 ஆண்டில் நீதி வழங்கப்பட வேண்டும்.
- அனைத்து நீதிமன்றங்களும் வரும் 2027-க்குள் டிஜிட்டல்மயமாக்கப்படும். இதன்மூலம் வழக்குகளை சில நொடிகளில் கண்டுபிடிக்க முடியும்.

**புதிய 'லவ் ஜிகாத்' தடை சட்டம்**

உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர்கள் கூறியதாவது: உண்மையான அடையாளங்களை மறைத்து பெண்களை திருமணம் செய்து பாலியல் உறவில் ஈடுபட்டால் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்க பாரதிய நியாய சன்ஹிதா மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு உத்தராகண்டின் ஹரித்வாரை சேர்ந்த சோனியாவை, ராகுல் என்பவர் காதலித்து திருமணம் செய்து கொண்டார். திருமணத்துக்குப் பிறகே அவரது உண்மையான பெயர் அசார் அகமது என்பது சோனியாவுக்கு தெரியவருகிறது.

இதுதொடர்பாக ஹரித்வார் போலீஸ் நிலையத்தில் சோனியா புகார் அளித்து வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. நாடு முழுவதும் இதுபோன்ற லவ் ஜிகாத் வழக்குகள் அதிகரித்து வருகின்றன. புதிய மசோதாவில் இடம்பெற்றிருக்கும் சட்ட விதிகளின்படி இதுபோன்ற லவ் ஜிகாத் வழக்குகளில் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்க முடியும். இவ்வாறு மூத்த வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

---

# நம்பிக்கையில்லாத் தீர்மானம்



பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, ஜூலை 20 தொடங்கி ஆகஸ்ட் 11 வரை நடந்த மழைக்காலக் கூட்டத்தொடரில், மக்களவையில் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்தன. விவாதத்தின் இறுதியில் பிரதமர் மோடி ஆற்றிய பதிலுரையின்போது எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன. இதனால், மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியில் முடிந்தது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது என்ன? எந்தெந்தத் தருணங்களில் எதிர்க்கட்சிகள் இதைக் கொண்டுவரலாம்?

**இப்போது ஏன்?** அரசின் பெரும்பான்மை குறித்தோ ஆட்சி செய்யும் திறனிலோ நம்பிக்கை இழக்கும்போது, எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது வழக்கம். அதாவது, இந்தத் தீர்மானத்தின் மூலம் எதிர்க்கட்சிகள் அந்த அரசைச் சவாலுக்கு உட்படுத்துவது என்று பொருள் கொள்ளலாம். மணிப்பூர் விவகாரத்தில் மத்திய அரசின் செயல்பாடுகளில் எதிர்க்கட்சிகள் அதிருப்தி கொண்டிருந்ததாலும் பிரதமர் மோடி அவைக்கு வந்து அது தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என்பதற்காகவும் எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தன.

**விதிமுறைகள்:** மக்களவை நடத்தை விதிகள் 198, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைப்பதற்கான விதிமுறைகளைக் குறிப்பிடுகிறது. அதன்படி மக்களவையில் எந்த உறுப்பினரும் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைக்கலாம். ஆனால், அந்தத் தீர்மானத்துக்குக் குறைந்தபட்சம் 50 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. அந்தத் தீர்மானம் எழுத்துபூர்வமாக இருக்க வேண்டும். தீர்மானத்தைக் கொண்டுவரும் உறுப்பினரின் கையெழுத்து அதில் இருக்க வேண்டும். தீர்மானத்தை அவையின் அமர்வு நாளில் மக்களவைத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். காலை 10 மணிக்குள்ளாகத் தீர்மானத்தின் எழுத்துபூர்வ அறிவிப்பையும் உறுப்பினர் வழங்க வேண்டும். அதை அவைத் தலைவர் அவையில் வாசிப்பார். அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த பிறகு, தீர்மானத்தை விவாதத்துக்கு ஏற்பதா, இல்லையா என்பது குறித்து அவைத் தலைவர் முடிவு செய்வார். தீர்மானத்தை அவைத் தலைவர் ஏற்றுக்கொண்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கான தேதி, நேரம் முடிவு செய்யப்படும்.

**விவாதம்:** உறுப்பினர் கொண்டுவந்த தீர்மானம் மக்களவையில் விவாதிக்கப்படும். முதலில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமர்ப்பித்த உறுப்பினர், தீர்மானத்தை முன்மொழிந்து பேசுவார். பிறகு அவையில் உள்ள எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் தீர்மானத்தின் மீது பேச வாய்ப்பு அளிக்கப்படும். அதைத் தொடர்ந்து அரசுத் தரப்பிலிருந்து பதில் அளிக்கப்படும். இதில் அமைச்சர்கள் பலரும் பேசுவார்கள். இறுதியாகப் பிரதமர் பதிலுரை வழங்குவார். பிரதமரின் பதிலுரைக்குப் பிறகு, மக்களவையில் அத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

**வாக்கெடுப்பும் வாக்குகளும்:** நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிப்பார்கள். தீர்மானம் வெற்றி பெற்றால், அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டதாகக் கருதப்படும். அந்தச் சூழலில், அரசு பதவிவிலக நேரிடும். தீர்மானம் தோற்கடிக்கப்பட்டால், அரசு எந்தச் சிக்கலும் இல்லாமல் ஆட்சியைத் தொடரும். ஒருமுறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபிறகு, அடுத்த 6 மாதங்களுக்கு மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடியாது என்பது விதி.

**ஏன் தீர்மானம்?** மக்களவையில் ஓர் அரசுக்கு அறுதிப் பெரும்பான்மை இருக்கும்போது, எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது ஏன் என்ற கேள்வி எழலாம். குறிப்பிட்ட ஒரு விஷயத்தை (மணிப்பூர் விவகாரம் போன்ற தீவிரமான விஷயங்கள்) ஒட்டி நம்பிக்கையில்லாத் தீர்மானமாகக் கொண்டுவரும்போது, அதுபற்றி விவாதங்கள் அவையில் நடைபெறுவதன் மூலம், அந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் அரசின் அணுகுமுறை, செயல்பாடுகள் குறித்த பார்வை வெளிப்படும். மக்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும்.

**நம்பிக்கைக் கோரும் தீர்மானம்:** எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதைப் போலவே நம்பிக்கைக் கோரும் தீர்மானமும் உண்டு. பொதுவாக, அரசு பெரும்பான்மையை இழக்கும்போது இத்தீர்மானம் கொண்டுவரப்படுவது உண்டு. இது குடியரசுத் தலைவர், அவைத் தலைவர் அறிவுறுத்தலின் பேரில் நடைபெறும். சில நேரம் உள்கட்சிப் பிளவு ஏற்படும்போது, ஆளுங்கட்சி பெரும்பான்மையை இழந்துவிட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகிறபோது, அரசே முன்வந்து நம்பிக்கை கோரும் தீர்மானத்தைக் கொண்டுவருவதும் உண்டு.

**வரலாறு:** மக்களவையில் இதுவரை 28 முறை நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்டுள்ளன. 1963இல் ஜவாஹர்லால் நேரு அரசுக்கு எதிராக முதல் முறையாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டது. 1964–1975 காலகட்டத்தில் 15 நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. இவற்றில் லால் பகதூர் சாஸ்திரி அரசுக்கு எதிராக 3, இந்திரா காந்தி அரசுக்கு எதிராக 12 தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டன. 1977–79 காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த மொரார்ஜி தேசாய் இரண்டு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொண்டார். முதல் முறை வெற்றிபெற்ற அவர், இரண்டாவது முறை போதுமான ஆதரவு வாக்குகளைத் திரட்ட முடியாததால், பதவி விலக நேர்ந்தது.

1981–1982இல் மட்டும் இந்திரா காந்தி 3 முறை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொண்டு தோற்கடித்தார். 1987இல் ராஜீவ் காந்தி ஒரு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொண்டு தோற்கடித்தார். 1991 முதல் 96 வரை பிரதமராக இருந்த பி.வி.நரசிம்மராவ் 3 முறை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொண்டு தோற்கடித்தார். 2003இல் வாஜ்பாய் அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியில் முடிந்தது. 2014 முதல் தற்போது வரை பதவியில் இருக்கும் நரேந்திர மோடி முதல் முறையாக 2018இலும், இரண்டாவது முறையாக 2023இலும் என இரண்டு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொண்டு தோற்கடித்தார்.

குறுகிய காலமே பிரதமர்களாக இருந்த வி.பி.சிங் (1989–90), தேவ கவுடா (1996–97), வாஜ்பாய் (1998–99) ஆகியோர் நம்பிக்கை கோரும் தீர்மானம் கொண்டுவந்து அதில் தோல்வியடைந்தனர். இதனால் பதவி விலகினர். 2008இல் மன்மோகன் சிங் நம்பிக்கை கோரும் தீர்மானம் கொண்டுவந்து வெற்றிபெற்றார்.

**தொகுப்பு: டி.கார்த்திக்**